Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை அ. 1-0

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 } சனிக்கிழமை, 28-7-1945 ஆடி-மீ 13உ { இதழ் 42

## புராணமும் பகுத்தறிவும் விஞ்ஞானமும்

தேவேந்திரனாயிருந்தாலும் பார்ப்பானைக் கொன்றால் "பிரமஹத்தி" தோஷம் பிடித்துக்கொள்ளும் என்பதற்குத் திருவிளையாடற் புராணத்தில் முதலாவது கதை யெழுதப்பட்டிருக்கிறது. அந்தக் கதையின் முக்கிய நோக்கம், "பிராமணனைக் கொல்வது பெரும் பாவமென்பதும், அப்பாவத்தை நாலு பங்கிட்டுக் கழித்த விதம், பிரமஹத்தி தோஷமும் மதுரை யெல்லையில் வந்தால் நீங்கிவிடும்" என்பதுமேயாகும். "மனிதனைக் கொல்வது பாவம்; அந்தத் தோஷம் பிடித்தது" என்று எழுதப் பரஞ்சோதி போன்ற பண்டாரங்கட்கு எட்டவில்லை. முதலில் பிரமஹத்தியின் மகத்துவத்தை யெழுதியிருக்கிறார். இருக்கட்டும். இப்படலத்தில் இந்திரனை இரண்டு முறை பிரமஹத்தி தொடர்ந்திருக்கிறது. ஒரு கதையில் ஒரேமாதிரியான இரண்டு தப்பிதம் நடந்திருப்பது இந்திரனுடைய பயித்தியக்காரத்தனத்தையோ அல்லது பரஞ்சோதியின் கதையெழுதத் தெரியாத தன்மையையோ விளக்கி நிற்கிறதென்பதில் ஐயமில்லை. முதலாவது பிடித்த பிரமஹத்தியானது "குருவானவர் வானவர்க்குப் புரட்டாக யாகம் செய்ததற்காக இந்திரனால் கொலை செய்யப்பட்டதால்" ஏற்பட்டது. அந்த பிரமஹத்தியை நான்கு பங்கு வைத்து விலக்கிக்கொண்டார்.

"தெற்றெனப் பிரமபாவம் சிதிவர்
தமர் வேண்டிப்
பற்றலும் அவனைத் தீர்ப்பான்
பண்ணவர் மரமேல், மண்மேல்,
பொற்றொடியார்மேல் நீர்மேல்
வேண்டினர் பகுத்தலோடு
மற்றவர் எதியார் தீர்க்கும்
வண்ணம்பர் பென்ன விண்ணோர்"

(இ-ள்) தேவேந்திரனைப் பிரமஹத்தி சூழ்ந்தது பற்றியது. அதனை யொழிக்கும் பொருட்டு மரம், பூமி, மாதர், தண்ணீர் ஆகிய நான்குக்கும் சரிபாகமாக்கிக் கொடுத்தனர். எப்படி இவற்றைத் தீர்த்துக் கொள்வதென்று அந்த நால்வரும் கேட்டதற்கு தேவர்கள்

"அப்பிடை நுரையாய் மண்ணில்
அருவருப் புவராய் அம்பொற்
செப்பிளம் கொங்கையார் பால்
நீண்டுதற் கரிய பூப்பாய்
தப்பிணர் மரத்திற் கசிவும்
பயினதாய்க் கழிக வென்றார்
இப்பழி சுமந்த எங்கட்கு
என்னலெனென்றார்........."

(இ-ள்) தண்ணீரில் நுரையாகவும், பூமியில் உவர்மண்ணாகவும், இளமை பொருந்திய மாதர்களிடத்தில் தீண்டக்கூடாத மாதவிடாயாகவும், மரத்திற்குக்கொடுத்தால் பாகம் பிசினாகவும் கழியும் என்று சொன்னார்கள். இந்தப் பழியைச் சுமந்த எங்கட்கு சாந்தியாக எதை வரம்கொடுக்கிறீர்கள் என்று கேட்டனர்.

கருவின்மாதர் கருவயிர்க்கும் அளவும்
முறையிற் கணவர் தோள்
மருவி வாழ்க, மண்ணகழ்ந்த குழியும்
அதனால் வடுவொழிக,
பொருவில் நீரும் இறைத்தோறும்
ஊறிப்பெருகுக, மரங்குறைபட்
டொருவிலாலும் தழைகளை
ஒழியா வனும் உதவினர்.

(இ-ள்) பெண்கட்குக் கர்ப்பமுற்றது முதல் பிரசவிக்கிற வரையில் ஒழுங்காக புருஷனுடன் சம்போகம் செய்யலாம்; பூமிக்கு வெட்டப்பட்ட குழி தானே மூடிப்போகும்; நீருக்கு இறைக்க இறைக்க மேலும் ஊறிக்கொண்டே இருக்கும்; மரத்திற்கு வெட்டினால் மறுபடியும் தழையும் என்று நான்கு காலத்துக்கும் ஒழியாத வரத்தைத் தேவர்கள் கொடுத்தார்கள்.

இவை திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டிருப்பவையாகும். இந்திரன் பார்ப்பானைக் கொன்றதால் வந்த பிரமஹத்தி தோஷத்தை நான்கு பங்கு வைத்து மாதவிடாய், உவர்மண், பிசின், நுரை என்ற மாதிரியில் பெண், மண், மரம், நீர் ஆகியவற்றில் விட்டிருக்கின்றனர். உலகில் எவ்வளவோ பொருள்கள் இருக்க இந்த நாலிலும் விட்ட காரணமென்னவோ? ஆணுக்கு ஒரு பங்கை விட்டிருக்கலாம். மிருகம் பட்சிகளுக்கும் பங்கு கொடுத்திருக்கலாமே. அது போகட்டும் இந்திரனைப் பிரமஹத்தி பிடிக்குமுன் பெண்கட்கு மாதவிடாய் இல்லாமலிருந்ததா? மாதவிடாய் என்பது என்ன வென்ற விஷயமே திருவிளையாடல் பாடிய பரஞ்சோதிப் பண்டாரத்துக்குத் தெரியாது பாவம்! பெண்ணுக்கு பிரமஹத்தியான மாதவிடாயைக் கொடுத்தானே இந்திரன்! அப்படியானால் பெண் குழந்தை பிறந்தவுடனேயே இது தோன்றவில்லையே? தவிர 40 வயதுக்கு மேல் நின்றுவிடுகிறதே! இதற்குக் காரணம் மதுரைப் பெருமான் திருவிளையாடலில் ஒன்றை புகலானோம். திருப்பி வரங்கொ

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டுத்த சோதாவது "12-வயது வரை தோன்றாது; 40-க்கு மேல் நிலைத்திருக்கும்," என்று எழுதி வைக்கக்கூடப் புத்தியில்லாத பரஞ்சோதிப் பண்டாரம் புராணமெழுதப் புறப்பட்டது வேடிக்கையல்லவா?

மாதவிடாயென்பது 28-நாட்களுக் கொருமுறை கர்ப்பப்பை கர்ப்பம் தாங்க வாய்ப்பில்லாத வரை அழிந்தழிந்து தோன்றுகிறது; என்று கர்ப்பம் வாய்க்கிறதோ அதிலிருந்து கர்ப்பத்தை மூடிப் பிறகு காத்து வளர்க்க ஆரம்பிக்கின்றது. பிறகு, அழிய முடிகிறதில்லை. குழந்தை பிறந்த பின்னரும் சில மாதங்கள் சென்று உண்டாகிறது. மீண்டும் மாதந்தோறும் அழிகிறது. அந்த அழிவே மாதவிடாயாக வெளிப்படுகிறது. சுமார் நாற்பதாண்டுக்குப் பிறகு கர்ப்பப்பை ஒழிந்தே போகிறது. பின்னர் கர்ப்பமுண்டாவது மில்லை; மாதவிடாயும் கிடையாது. இப்படியே குழந்தைப் பருவத்தில் கர்ப்பப்பை கிடையாது. மாதவிடாயுமில்லை. கர்ப்பமும் உண்டாவதில்லை. கர்ப்பப் பையின் தோற்றமுண்டான முதலாவது அழியும் காலத்தையே மக்கள் "ருதுவாகிவிட்டாள்" என்று கூறுகின்றனர். பின்னர் முறையே பை தோன்றித்தோன்றி அழிகின்றது. இந்த விஷயம் பண்டாரத்துக்கு விளங்கவில்லை. உடற்கூறு சாஸ்திரத்தின் எள்ளளவாவது படித்திருந்தால் இந்தப் பரிதாப நிலை ஏற்பட்டிருக்காது.

பூமிக்குக் கொடுத்த கால்பங்கு பிரமஹத்தி உவர்மண்ணாகத் தோன்றியதாம். பூமியின் பல வகை மண்ணில் உவர்மண்ணும் ஒன்றாகும். இதற்குக் காரணமுண்டானால் செம்மண், மணல், கருப்பு மண், களிமண் போன்ற பலவற்றுக்கும் கதை கட்டுதற்கு பரஞ்சோதியார் அற்பாயுஷாகப் போனதுதான் காரணம் போலும்; இதற்குக் கொடுத்த பரிகாரம் அற்புதமானது. வெட்டின குழி தானே மூடிப்போகுமாம். வெட்டிய குழி வேறு என்னதான் செய்யும்? மழை பெய்யும்போதும் காற்றடிக்கும்போதும் பக்கத்திலுள்ள மண் புரண்டு குழியில் விழுவதும் அதனால் அது சிறிது சிறிதாக மேவி விடுவதும் யாவருமறிந்த உண்மையாகும். இதற்கு வரங் கேட்டதாகவும் தேவர்கள் இந்த அற்புதமான வரத்தைக் கொடுத்ததாகவும் பரஞ்சோதி எழுதிவைத்திருக்கிறார். படிப்பவனுக்கு ஒரு நாளும் புத்தி வராது என்ற திடமான நம்பிக்கையினாலல்லவா இவ்வளவு அசட்டுத்தனமாக எழுத அவர் மனந்துணிந்திருக்கிறது.

மரத்திற்குக் கொடுத்த ஒரு பங்கு பிரமஹத்தி பிசினாக வருகிறதாம். மாதரிடத்தில் மாதவிடாயாக மாதந்தோறும் வெளிவருகிறமாதிரி பிசினும் மாதந்தோறும் வெளிவரவில்லை. நாள்தோறும் நாழிகைதோறும் தோன்றிக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. தவிர பட்டையை வெட்டினால்தான் பிசின் தோன்றும். இல்லாவிட்டால் தோன்றாது. பங்கு வைத்துக் கொடுத்த பிரமஹத்தி உள்ளேயே தங்கிவிடும். இதற்குக் கொடுத்த பரிகாரம் அற்புதமாக இருக்கிறது. வெட்டின மரம் தழைக்குமாம். இந்த பிரமஹத்திக்கு முன் வெட்டினால் தழையாது போலும்! இன்னொரு விஷயமிருக்கிறது. தென்னை, பனை, கமுகு முதலிய மரங்கள் வெட்டினால் தழைக்கிறதில்லை. இவைகளை நீக்கிப் பிரமஹத்தி கொடுத்ததாக திருவிளையாடலில் இல்லை. இவையேன் இதற்குக் கட்டுப்படவில்லையோ? பிசின் வருகிற மரம்தான் தழையுமென்று சொன்னால் அதுவும் பொருந்தாது. வாழை மரத்தில் பிசின் வருவதில்லை. வெட்டினால் குலை விடுகிறவரை வளருகிறது. இதற்கென்னவாம் வழியென்ன?

இதற்குமேல், நீரில் தோன்றும் நுரை இந்தப் பிரமஹத்தியின் ஒரு பகுதியென்று திருவிளையாடல் கூறுகிறது. பிரமஹத்தி அசுத்தமாக வெளிப்படும் என்ற பொருளில் புராணக்காரர் கூறியிருக்கிறார். அந்தப் புத்தி இங்கே முட்டுகிறது. நுரை நீரிலேற்படும் அழுக்குக் காரணமாக அசுத்த நீரில் உண்டாவதியல்பு. இதை மனத்திற்கொண்டு பண்டாரம் எழுதியிருக்கிறார். ஆனால் சமுத்திர நீரில் அசுத்தமிருப்பதில்லை. சுத்தமான அலைநீரில் பரிசுத்தமான நுரை பொங்கியெழுந்து ஓடி வருகின்றது. அதில் தலைவைக் கொடுத்துத் தீர்த்தமாடாத வைதிகர் உண்டா என்பது கவனிக்கத்தக்கது. மாதவிடாயின் ஒரு பகுதியானது இந்த நீர் நுரையென்பதுண்மையானால் இந்த நுரையைத் தொடலாமா? இதில் முழுகலாமா? ஒரே பிரமஹத்தியின் ஒரு பங்கு தீட்டாகவும் மற்றொருபங்கு பரிசுத்தமாகவும் கொள்ளப்படுவானேன். இந்நிகழ்ச்சியால் இரண்டும் ஒரு கொள்கையற்றியதன்றென்பது விளங்கும். இதற்குக் கொடுத்ததாகக் கூறப்படும் பரிகாரம் மூன்றாந்தரமான மூடத்தனமாக இருக்கிறது. நுரையுண்டான தண்ணீர் இறைத்தால் ஊறுகிறதாம். பல குளங்களில் நுரை நிறைந்திருப்பதைக் காணலாம். ஆனால் இறைக்க இறைக்கக் காய்ந்துபோவதுமே யல்லாது மறுபடி ஊறுவதில்லை. பூமி செழிப்பான இடத்தில்தான் தண்ணீர் ஊறக்கூடும்.

இவ்வளவு பயித்தியக்காரத்தனமாக எழுதியுள்ள திருவிளையாடற் புராணம் பக்தகோடிகளால் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மாதவிடாய்ச் செய்திகள் பரஞ்சோதிப் பண்டாரத்திற்கு மட்டுமல்ல பரமசிவனுக்குந் தெரியாதென்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் புராணம் பரமசிவனிடத்தில் நந்தி யெம்பெருமான் கேட்டுத் தெளிந்து பரம்பரையாக உலகத்துக்கு வந்ததென்றும் எழுதப்பட்டிருக்கிறது. பரஞ்சோதியாருடைய புராணத்தைப் பரமசிவனே சொன்னதாக எழுதித் தீர்த்தால் ஜனங்கள் மிரண்டு கடவுள் வாக்குக்கு எதிர்வாக்கில்லையென்று கருதிப்பயந்து கேட்டுக்கொண்டிருக்க ஆரம்பித்திருக்கின்றனர். இந்த மாதிரியாகப் புத்தியை யோசிக்க வொட்டாது மழுப்பிக் குழப்பி மதியைக் கெடுப்பவை இன்று நமக்குக் கலைகளாக விளங்குகின்றன. இதைக் காப்பாற்ற..............................கம்பர்களாக ஆகிறார்கள்.

"கலை இரசிப்போன்"

---

நமது இயக்கப் பத்திரிகைகளின் விற்பனையாளர் பெங்களூர் தோழர் வெ. நாராயணசாமி மனைவியாருக்கு 13-7-45-ல் ஒரு ஆண் மகவு பிறந்துள்ளது.

ரோஜா முத்தையா
ச்சி நூலக அறக்கட்டளை

# சேலத்தில் பெரியார் பேச்சு

20-7-45-ல் தேதி மாலை சேலம் விக்டோரியா பப்ளிக் மார்க்கெட்டில் டாக்டர் சேர்பாஸ் அவர்கள் தலைமையில் ஜஸ்டிஸ்கட்சித் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சுமார் 10000 மக்கள் இடையில் நிகழ்த்திய சொற்பெருக்கில் வெளியிட்ட அபிப்பிராயம்.

தலைவர் அவர்களே! தோழர்களே! நான் இன்று [illegible] சங்கத்தில் வியாபாரிகள் பேரால் ஒரு இலவச வாசகசாலை துவக்கவிழா ஆற்றவந்தேன். இந்தச் சமயத்தில் தற்காலப் பிரச்சினை பற்றி எனது கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று பல நண்பர்கள் விரும்பினதற்கிணங்க இன்று பேசுகிறேன்.

இன்று நாட்டில் எங்குபார்த்தாலும், கட்சி அபிப்பிராய பேதங்கள் வளர்ந்துவிட்டன. நாடு, இனம், மதம், வகுப்புகள் பேரால் கட்சிகளும், கட்சியின் பேரால் கட்சிகளும், கட்சிக்குள் அபிப்பிராய பேதங்களும், இப்படி பல இருந்து வருவதோடு தோன்றியும் வருகின்றன.

இது இந்த நாட்டிற்கும், இந்த நாட்டிலுள்ள இனங்களுக்கும், இனங்களுக்குள் உள்ள மதங்களுக்கும், உள் வகுப்புகளுக்கும் இயற்கையேயாகும். இவை இப்போது அதிகமாகத் தோன்றுவதற்கு காரணம் என்னவென்றால் நாடு, இனம், மதம், வகுப்பு ஆகியவைகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்க யாராவது முயற்சித்து அதை சரியாக வெற்றிபெற சமயம் வருமானால் அந்தச் சமயங்களில் அதிகமான எதிர்ப்புகள் தோன்றி அவை வெற்றி பெறாமல் செய்யவேண்டியது சில சுயநலக்காரர்களுக்கு அவசியமாக இருப்பதால் இந்தப் பேதங்களை வளர்ப்பவர்கள் வயிறு வளர்ப்பவர்கள் ஆகியவர்களுக்கு அவசியமாகிவிடுகிறது. ஆனால் மாறுதல் சமயம் எதிர்ப்பு வலுக்கிறது.

இந்த நிலைமையை சமாளித்தால்தான் நமக்கு வெற்றி உண்டு. இவ்வெற்றி நமக்கு மாத்திரம் அல்ல இந்தியா என்ற உபகண்டத்தில் வாழும் எல்லா மக்களுக்குமேயாகும்.

உதாரணமாக,

இந்தியா இந்தியருக்கு என்ற கூச்சல் இருக்கும்போது, முஸ்லிம்நாடு முஸ்லிம்களுக்கு என்றால், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஆட்சேபிக்க சங்கடம் என்ன? முஸ்லிம்களில் சிலருக்கு கஷ்டம் என்ன? இதை எதிர்க்க தேசிய முஸ்லிம் சங்கம் ஏன்? அதுபோலவே திராவிட நாடு திராவிடருக்கு என்றால் திராவிடர் அல்லாதவர்களுக்கு சங்கடம் என்ன? திராவிடரில் சிலருக்கு அது சங்கடமாகி திராவிட சங்கத்தைத் திராவிடரே விரும்பாத, திராவிடரல்லாத எதிர்க்கும் பிராமணரல்லாத "தென் இந்திய" சங்கம் ஏன்?

மற்றும் இந்தியா இந்தியருக்கு என்று சொல்லிவிட்டு, இந்தியா இந்துக்களுக்கு என்றும், இந்தியா இராமராஜ்யத்துக்கு என்றும் கூப்பாடு போடும் இந்து மகாசபையும் காந்தியக் கோஷ்டியும் ஏன்?

இவை இந்தியா இந்தியருக்கு ஆவதைத் தடுத்து இந்தியா ஐரோப்பியருக்கு ஆவதற்குப் பயன்படத்தானே உதவிசெய்கின்றன.

இன்று இந்தியாவில் இந்தியர்கள் ஆட்சி நடக்கவேண்டுமானால் இந்தியாவில் உள்ள மதக்காரர்களுக்கும் இனக்காரர்களுக்கும் அவரவர்கள் ஆட்சியாக ஆகவேண்டும். ஒரு மதக்காரரை மற்ற மதக்காரரும் ஒரு இனத்தாரை மற்ற இனத்தாரும் ஆட்சிசெலுத்த ஆசைப்படுவதும் ஒழியவேண்டும். அது ஒழியாதவரை "இந்தியா இந்தியருக்கு" இல்லை. இது உறுதி.

## வேவல் திட்டம்

தோழர்களே! இன்று இந்தியா "இந்தியருக்கு ஆகுவதற்கு வழிகாட்டிய வேவல் திட்டம்" (இதை நான் சொல்லவில்லை, ஜின்னா சாயபும் சொல்லவில்லை காங்கரஸ்காரர்கள் சொன்னது) முறிந்துபோன காரணமென்ன?

இந்த நாட்டில் யாருக்காவது ஜாதிமத இன வகுப்புப் பேதமில்லாமல் "தேசிய தலை" அபிமானமேயிருந்திருக்குமானால் அவர்கள் "யார் வேண்டுமானாலும் ஆட்சியை ஒப்புவித்து விட்டு பிரிட்டிஷார் வெளியே போ" என்றல்லவா சொல்லி இருக்கவேண்டும்? பிரிட்டிஷாரை நோக்கி "எனது இந்திய சபையை நீயே கொடுத்து உன் இஷ்டப்படி ஆட்சி புரிய நான் அதில் தலையிடுவதில்லை" என்று சொல்லி, தானாகவே வேவல் "இந்தியத் தலைவர்களை" அழைத்து அதிகாரங்களை கொடுக்கவந்தால் இந்திய தேசியத் தலைவர்கள் அதை கோவிலில் பிரசாதம் வழங்கும்போது பார்ப்பனர்கள் கூட்டம் கூடி ஒருக்கொருவரை நீட்டி, சிலர் இரண்டொருவரையும் நீட்டி கடைசியாக பூசாரி சகிக்க முடியாமல் பிரசாதத் தட்டத்தைத் தூக்கிக்கொண்டு உள்ளே போய்விடுவது போல் செய்துவிட்டார்கள். இது ஏன்? பற்று சண்டையா? இல்லையே! பின் என்னவென்றால் யார் பங்கை யார் கையில் கொடுப்பது?, யாருக்கு யார் பிரதிநிதி?, என்கிற சண்டை தானே; இது சிரிப்புக்கு இடமானதல்லவா?

வேவல் பிரபு தனது நிர்வாகசபையை இந்தியர் வசம் விட்டுவிடுவதாகக் கூறி "இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சரி சம எண்ணிக்கை; இந்துக்களில் இருந்து விலகியிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் மற்றவர்களுக்கும் தன் இஷ்டப்படி சிறிது பாகம் தருகிறேன் ஓடிவாருங்கள் மாலைக்கு" என்று கூப்பிட்டார். கூப்பிடப்பட்டவர்கள் இதை ஒப்புக்கொண்டு மகிழ வந்தார்கள். ஜின்னா சாயபு அந்தப் பேச்சுப்படி முஸ்லிம்களுக்கு உள்ளதை என்னிடம் கொடுத்துவிடு என்றால் காங்கரசுக்காரர்கள் இதை ஏன் ஆட்சேபிக்கவேண்டும்? எந்த முஸ்லீமாவது ஒன்று ஆட்சேபித்து இருந்தால் அதில் அருத்தமுண்டு. வேவல் பிரபு ஜின்னாவைத் தவிர வேறு பிரதிநிதி முஸ்லீம்களுக்கு இருப்பதாகக் கருதாததினால் வேறு எந்த முஸ்லீமையும் அழைக்கவில்லை.

## ஆசாத் அழைப்பு

இந்துக்களுக்கு ஆக என்று தெரியும்படியாகவே காந்தியாரை அழைக்காமல் பிரதிநிதியாக—காங்கரசை இந்துக்கள் பிரதிநிதி ஸ்தாபனம் என்ற தன்மையில் காந்தியாரை அழைத்தார். இந்த அளவில் தான் வேவல் திட்டத்தின் தன்மையும் அதன் உள்கருத்தும் இருந்திருக்கிறது. மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்களைத் தான் காங்கரசுக்குப் பிரதிநிதியாகக் கொள்ளவேண்டுமென்று காந்தியார் கேட்டுக்கொண்டதின்பேரில் தான் அவர் அழைக்கப்பட்டாரே தவிர முஸ்லிம் பிரதிநிதியாக அழைக்கப்படவில்லை. அதுவும் காந்தியாரும் வேவல் பிரபுவும் ஜின்னா சாயபுக்கு பயந்துகொண்டு மௌலானாவை அழைக்கவேண்டியவர் ஆனார்கள். ஏன் எனில் ஜின்னா சாயபு காந்தியாரைப் பார்த்து 'நீ யார்? இங்குவர காரணம் என்ன? உம்முடைய சங்கத்தையோ, பார்லிமெண்டரி போர்டையோ கட்சியை" என்று கேட்டுவிட்டால் இருவரும் விழிக்கவேண்டியவர்களாகி விடுவார்கள். காந்தியார் தன்னை இந்து என்றால் இந்துமகாசபை சண்டைக்கு வந்துவிடும். தன்னை சர்க்கார் தலைவர் என்றால் ராஷ்டிரபதி ஆசாத்சாயபுக்கு மானம் போய்விடும். ஆதலால் ஆசாத் சாயபுக்கு அர்ஜன்ட் வாரண்டு அனுப்பப்படவேண்டியதாயிற்று. அதனால் வேவல் பிரபு காங்கரசை (ஆசாத் சாயபை) எல்லோருக்கும் பிரதிநிதி என்றோ, அல்லது முஸ்லிம்களுக்குப் பிரதிநிதியாக ஆசாத் சாயபுவையும் கூப்பிடுகிறோம் என்றோ கருதி கூப்பிடவில்லை.

இந்த நிலையில் வேவல் அழைப்புக்குச் சென்றவர்கள் செய்யவேண்டிய காரி

யம் என்ன என்று நீங்கள் யோசித்துப் பாருங்கள். இவர்கள் சொன்னது செய்யக்கூடியது இருந்தால் எவ்விடம் ஒப்புவிக்கும் இவ்வளவு காலமும் அவ்விதமான என்ன? மரியாதை என்ன? நீர் ஏன் வெளியில் சொல்லாமல் இவ்வளவு காலம்?, என்பவைகள் பற்றிய பிரச்சினைகளைத்தான் வெளிப்படுத்தவும் குறிப்பாகச் சொல்லவும் முயற்சித்து இருக்க வேண்டியதேயாகும். ஆனால் அதில் அதாவது இந்தப் பிரச்சினைகளில் அதிகாரம் காலம் ஆகியவைகளில் காங்கரசுக்கு (அதாவது இந்துக்களுக்கும்) மற்ற தாழ்த்தப்பட்ட—சீக்கியர் முதலியவர்களுக்கும் எவ்வித அதிருப்தியும் ஆட்சேபணையும் இல்லை என்பதை காட்டிக்கொண்டார்கள்.

அதோடு மாத்திரம் அல்லாமல் யார் யாருக்கு எவ்வளவு என்பதிலும் சிறிதுகூட அதிருப்தியும் ஆட்சேபணையும் இல்லை என்றும் காட்டிக்கொண்டார்கள். அதோடு மாத்திரமல்லாமல் இந்தப் பிரிவினை இத்தனை பங்கு என்பதிலும் அதிருப்தியோ ஆட்சேபணையோ யாருக்குமிருந்ததாகத் தெரியவில்லை.

எனவே இவ்வளவைப் பொருத்தவரை நிலைமை விவாதத்திற்கு இடமில்லாமல் போய்விட்டது என்பதாக ஆகிவிட்டது.

## மாநாடு முறிந்ததேன்

இனி விவகாரம் என்ன? வேவல் மாநாடு முறிந்துபோனதேன்? இதற்குக் காரணஸ்தர்கள் யார்? என்பது நான் யோசிக்கவேண்டியதாகும். இந்துக்களுக்காக நியமிக்கப்படும் ஆட்களைப் பற்றி ஜின்னா சாயபோ, சிவராஜோ, (அம்பேத்கரோ) தாராசிங்கோ ஆட்சேபிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் வகுப்புக்கு நியமிக்கப்படும் ஆட்களைப் பற்றி ஜின்னா சாயபோ, ஆசாத் சாயபோ (காந்தியாரோ) தாராசிங்கோ ஆட்சேபிக்கவில்லை, சீக்கியர்களுக்காக நியமிக்கப்படும் ஆட்களைப்பற்றி ஆசாத் சாயபோ (காந்தியாரோ) ஜின்னா சாயபோ சிவராஜோ (அம்பேத்கரோ) ஆட்சேபிக்கவில்லை.

ஆனால் முஸ்லிம்களுக்காக நியமிக்கப்படும் ஆட்களைப்பற்றி அதுவும் ஆட்களைப்பற்றிக்கூட அல்ல என்று சொல்லலாம், நியமிக்கும் அதிகாரத்தைப்பற்றி ராஷ்டிரபதி (காந்தியார்) ஆட்சேபிப்பது என்றால் இதன் அர்த்தம் என்ன என்று பாருங்கள். முஸ்லிம்களுக்கு எவ்வளவு ஸ்தானங்கள் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் அந்த முஸ்லிம்கள் எங்கள் (இந்துக்கள்) அடிமைகளாக இருக்கவேண்டும் என்றால் இது எப்படி நியாயமும் சத்தியமும், நாணயமும் ஆகும் என்று யோசித்துப் பாருங்கள்.

இதற்கு முன் 1932-ல் வட்டமேஜை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்த பதவிகளைக் காந்தியாரின் பட்டினி விரதத்தின் பயனாய் காங்கரஸ்காரர்கள் கவிழ்த்துவிட்டதால் நேர்ந்த பலனை அறிந்து அப்படி விட்டு சும்மா இருந்த அம்பேத்கார், சிவராஜ் ஆகியவர்களை அவர்கள் அனாதைகள் முட்டாள்தனம் என்று உணர்ந்ததைப் பார்த்த பின்பும் கடுகளவு அறிவுள்ளது லீக் தலைவர்களுக்கு இருக்குமானால் முஸ்லிம் பிரதிநிதிகளை காங்கரசார் நியமிக்க ஒப்புக் கொள்ளமுடியுமா? என்று கேட்கிறேன்.

ஆகவே காங்கரஸின் சுயராஜ்ய சண்டை, தேசிய சர்க்கார் சண்டை என்பதெல்லாம் அதிகாரம், ஆட்சி இந்தியர்களுக்கு வருவது பற்றி அல்லவென்பதும் இந்தியர்களில் யார் கையில் அதிகாரம் வருகிறது என்பது பற்றியதேதான் என்பதும் இதிலிருந்து தெளிவாக விளங்கவில்லையா?

எனவே, வேவல் திட்டம் முறிய வேண்டியது காங்கரஸ்காரர்களுக்கு அவசியமான காரியமாய் இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டதால் அதை (வேவல் திட்டத்தை) காங்கரசார் முறித்துவிட்டார்கள் என்று கூறுகிறேன், முறிவுக்கு காங்கரஸ்தான் காரணம்.

## இன்றைய காங்கரஸ் பிரச்சினை

இன்றைய இந்தியாவின் நிலைமை காங்கரஸ் வெள்ளையன் போவது 'அல்ல' என்பதல்ல, வெள்ளையன் போய்விட்டால் வேறு எந்த ஆரியன் ஆளுவது?, என்பதே. அதாவது வெள்ளை ஆரியன் போய்விட்டால் மஞ்சள் ஆரியன் (பார்ப்பனர்) ஆளவேண்டும் என்பதேயாகும். ஆனால் அது நடக்கவிடமாட்டோம். வெள்ளை ஆரியன் ஒழிந்தால் இந்திய திராவிடன், முஸ்லிம், கிறிஸ்துவன் முதலிய எல்லாவித பிரஜைகளும் ஆளவேண்டும் என்பதேயாகும். இதுவே மஞ்சள் ஆரியர் தவிர்த்த மற்ற எல்லா இந்தியர் அதாவது திராவிடர்கள், ஆதிதிராவிடர் முதலியவர்களுடையவும் எண்ணமாகும்.

உண்மையில் இந்திய உபகண்டம் இதில் உள்ள எல்லா மக்கள் கைக்கும் வருவதை மஞ்சள் ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) ஒப்புக்கொள்ளவேமாட்டார்கள்.

பார்ப்பனர் கைக்கு இந்தியா கண்டம் ஆட்சி வராது என்று கண்டால் அவர்கள் எப்படிப்பட்ட விடுதலையையும், சுதந்திரத்தையும் மகாநாட்டையும், திட்டத்தையும் ஒழித்தே, முறித்தே தீருவார்கள். ஆனதால் பார்ப்பனர்களுக்கு அனுகூலம் ஆதிக்கம் இல்லாத எந்த ஆட்சியையும், ஆதிக்கத்தையும் அவர்கள் அழிக்கவே செய்வார்கள். அந்தக் காரணத்தால் இந்திய திராவிட அரசர்கள் ஒழிந்த முகலாயர்கள் இந்தியாவுக்கு வந்ததும் முகலாயர்கள் ஒழிந்து பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்ததுமாகும். இதனால் தான் பிரிட்டிஷார் பார்ப்பனர்களுக்குப் பயந்து பார்ப்பனர்களின் ஏஜண்டுகளாய் இன்று ஆட்சி நடத்துகிறார்கள்.

## இன்றைய ஆட்சி பிரிட்டிஷ் ஆட்சி அல்ல.

இன்று இங்கு நம் நாட்டில் நடப்பது பிரிட்டிஷார் ஆட்சி என்றா நீங்கள் கருதுகிறீர்கள்? ஒருக்காலும் இல்லை. பிரிட்டனிலும், பிரிட்டனின் வேதமாகிய பைபிளிலும் இல்லாத அதற்கு மாறான ஆட்சிதானே. அதாவது மனுதர்ம ஆட்சிதானே இங்கு நடைபெறுகிறது. இந்தப்படி ஒப்பந்தம் அதாவது மனுதர்மவாதிகள் (ஆரியர்கள்) உடன் ஒப்பந்தம் செய்துகொண்டு தானே பிரிட்டிஷார் (தங்கள்) பேரால் இங்கு ஆட்சி நடைபெறுகிறது.

பிரிட்டனிலோ, பைபிளிலோ, இங்கிலாந்திலோ, அவர்கள் ராஜநீதியிலோ பறையன், சூத்திரன், பிராமணன் இருக்கிறார்களா? இல்லையே! அப்படி இருக்க இங்கு சட்டம், நடப்பு, கோவில், குளம், உண்ணல், அருந்தல், கொடுத்தல், கொள்ளல், செல்வம், தொழில், கல்வி, கடவுள் எல்லாவற்றிலும் பிராமணன், சூத்திரன், பறையன் இருக்கக் காரணமென்ன? வெள்ளை ஆரியர் (பிரிட்டிஷார்) இந்தப் பேதத்தைக் காப்பாற்றிக்கொடுப்பதாக மஞ்சள் ஆரியர் (பார்ப்பனர்)களுக்கு வாக்குறுதி கொடுத்து இங்கு தங்கள் ஆண்டவைப் பலப்படுத்திக்கொண்டார்கள். அதற்குக் குறைவில்லாத அளவும் அதிகமாகவும் நம்மை மேலும் அடக்கிக்கொள்ள மஞ்சள் ஆரியருக்கு (பார்ப்பனருக்கு) வெள்ளையர் சன்னது—சட்டபூர்வமான அனுமதி கொடுத்துவிட்டார்கள். அதுதான் இந்துமத பிரசாரமும், இந்து அறநிலைய தர்ம சட்டமும், காப்பும், கோவில்கள் மேல் அடக்குகள் முதலியனவும் காப்பாற்றப்பட்டு வருவனவாகும். ஆதலால் நாம் இன்றைய ஆட்சியின் உண்மையான தன்மையை உணரவில்லை. உண்மையில் நாம் இன்றைய கொடுமையான ஆட்சி என்பதை ஒழிக்கவேண்டுமானால் வெள்ளை ஆரியர்-மஞ்சள் ஆரியர் ஒப்பந்தத்தை உடைத்து சுக்கல் ஆக்க வேண்டும், ஜின்னா சாயபு வெள்ளையரை உணரச் செய்ததுபோல் நாமும் உணரச் செய்ய வேண்டும்

## ஜின்னா செய்தது

ஜின்னா சாயபு என்ன செய்தார் என்றால்' ஓ வெள்ளையனே, பார்ப்பான் தான் உனக்குத்தெரிவதில்லை கொழுப்பான் என்று கருதி அவனை சரிப்படுத்திக்கொண்ட தைரியத்தில் நீ மௌனமாய் இருந்து விடாதே, என்னாலும். (முஸ்லிம்களாலும்)

[தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க]

# புதுவையில் திராவிட கழக துவக்கம்

## ஒரு மைல் ஊர்வலம்: ஊர்வலத்தில் 3000-பேர்
## மண்டபத்தில் 5000-பேர்: வெளியில் 5000-பேர்

**22—7—45ந் தேதி காலை புதுச்சேரி ஒதியஞ்சாலை கவாலியன் தியேட்டரில் திராவிடர் கழகத் துவக்கவிழா பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் மாபெரும் கூட்டத்துடனும், ஊர்வலத்துடனும் நடைபெற்ற விபரம்:**

(ஒரு நிருபர்)

22-7-45ந் தேதி காலை புதுச்சேரிக்கு வந்த ரயிலில் சுமார் 500 பேர்கள், தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, டி. ஷண்முகம், சி. என். அண்ணாதுரை, சத்தியவாணி அம்மை, காஞ்சி தங்கவேல் முதலியார், ஆதிலட்சுமி அம்மை, அன்பழகன், நெடுஞ்செழியன், ஜனார்த்தனம், நடராஜன், அழகிரிசாமி, சேலம் நடேசன், ரோசு. அருணாசலம், சம்பந்தம், பாலசுந்திரம், ஜகந்நாதம், திராவிடமணி, பீட்டர், விழுப்புரம் சேர்மன் கோவிந்தராஜுலு நாயுடு, இன்னாயின், சிங்காரவேல் சாமி மற்றும் அனேகர் தஞ்சை திருச்சி, சேலம், வடஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சென்னை, கோவை முதலிய எல்லா ஜில்லாக்களில் இருக்கும் ஏராளமான மக்கள் பெண்களுடன் வந்து இறங்கியது சேலம் மாநாட்டை ஞாபகப்படுத்துவதுபோல் இருந்தது. மற்றும் பஸ்ஸிலும் வண்டிகளிலும் மக்கள் அடிக்கடி வந்து பெருகியவண்ணமே இருந்தார்கள். நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்தபடி கவி பாரதிதாசன் அவர்கள் மாளிகையில் இருந்து 9-30க்கு தலைவர்கள் ஊர்வலம் மேளம், வாண்டு கொடிகள் வெற்றி வாழ்த்து உரை, வளைவுகள் ஆகியவைகளுடன் சுமார் 3000க்கு மேற்பட்ட மக்கள் பின் தொடர ஊர்வலம் சுமார் ஒரு மைல் தூரம் அனேக கொடிகளையும், வளைவுகளையும், தோரணங்களையும், அற உரைகளையும் கண்டு கடந்தும் சென்று 10-30க்கு கொட்டகையை அடைந்தது.

கொட்டகையில் ஊர்வல மக்கள் உள் செல்லுவதற்கு இடமில்லாதபடி ஏற்கனவே 4, 5 ஆயிரம் மக்கள் நிரம்பி இருந்தார்கள்.

தலைவர்கள் உள்சென்று அமர்ந்ததும் திராவிட நாட்டு இசைகள் பலரால் பாடப்பட்டன. பிறகு கவி பாரதிதாசன் வரவேற்புக் கூறி தோழர் அண்ணாதுரை அவர்களைக் கொடி உயர்த்தும்படி வேண்டினார். பெரிய ஆரவாரத்தின் இடையில் ஒரு சிறு சொற்பொழிவுடன் கொடி உயர்த்தப்பட்டதும் தோழர் திருவொற்றியூர் டி. ஷண்முகம் அவர்கள் திராவிடர் என்கின்ற சொல்லை விளக்கி மாநாட்டைத் துவக்கினார். பிறகு பெரியார் தலைமை வகித்து ஒருமணி நேரம் சொற்பொழிவாற்றி தலைமையுரை முடித்து தோழர் நெடுஞ்செழியன் அவர்களை திராவிடநாட்டுப் படத்தைத் திறக்கும்படி வேண்டினார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஈ. வெ. ராவுக்கு மயக்கம் ஏற்பட்டு ஆந்திர சுற்றுப் பிரயாணத்தில் ஏற்பட்ட ஒருவிதக் களைப்பும் உண்டானதால் தோழர் டி. ஷண்முகம் அவர்களைத் தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொண்டுமக்களையும் கேட்டுக்கொண்டு ஜாகைக்குச் சென்றார். பிறகு நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றித் திராவிடப் படம் திறந்து வைத்தார். பிறகு தோழர் அன்பழகன் அவர்கள் பெரியார் படத் திறப்பு ஆற்றினார்.

இத்துடன் காலை நிகழ்ச்சி இனிது நடந்து உணவுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் நடவடிக்கை பின்னர் வரும்)

---

மகாபலிபுரம் மு. கண்ணனுக்கும், மா. வடிவாம்பாளுக்கும் புதுப்பாளையத்தில் 15-7-45-ந் தேதி திருமணம் நடைபெற்றது.

ரஜாவில் வந்திருக்கும் நமது
14-ம் சேனை வீரர்கள்;
**கவர்னர் யுத்த நிதியில்**
துருப்புக்கள் வசதி நிதிக்கு என்று குறிப்பிட்டு
பணம் அனுப்பப்படுவதை அறிந்தால்
**ஜாப்களை ஒழித்துக்கட்ட**
அதிக சந்தோஷத்துடன் போர்முனைக்குத் திரும்பிச் செல்வார்கள்
அவர்கள் தங்கள் வேலையை அறிவார்கள்
அதைப்போன்று நாமும் நமது வேலையை
உணர்ந்து நடப்போமாக

ரோஜா முத்தையா

குடி அரசு

1945-வரு ஜூலை மீ 28உ

# காங்கரசின் பரிதாப நிலை

காங்கரஸ் தலைவர்கள் சிம்லா மகாநாட்டின் பயனாய் சிறையிலிருந்து வெளிவர நேர்ந்தது காங்கரசிற்கு ஒரு வெற்றியே. ஆனாலும், மற்றையும் அவர்கள் சிறை மீட்கப்படாமல் இருப்பதற்கு ஆக சர்க்காருக்கு (வேவல் துரைக்கு) காங்கரசார் சரியான வாக்குறுதிகொடுத்துத்தீர வேண்டியதாய் விட்டது. இந்த வாக்குறுதி என்னவென்றால், சர்க்கார் நடைபெறுவதற்கும் யுத்த காரியம் நடைபெறுவதற்கும் தங்களால் (காங்கரஸ்காரர்களால்) எவ்வித தொந்திரவும் ஏற்படாது என்பதாக வாக்குக் கொடுத்ததோடு சர்க்காரோடு எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் (ஒத்துழைக்கின்றோம்) என்றும் உறுதி கொடுத்து இருக்கிறது. இதற்குக் காரணம் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் விடுதலை ஆனது மாத்திரம் போதாது என்றும் இதனால் இவர்கள் தவிர மற்ற சிறையில் இருப்பவர்கள் தங்கள் மீது குறைகூறுவார்கள் என்றும் கருதியே அவர்களையும் விடுதலை செய்விக்கக் காங்கரஸ் தலைவர் சர்க்காருக்கு இந்த வாக்குறுதி கொடுக்கவேண்டியதாகி விட்டது. இது காங்கரசுக்கு பரிதாபகரமான ஒரு பெரும் சரணாகதி என்றே சொல்லி ஆகவேண்டும்.

காங்கரசார் சட்டம்மீறி, குழப்பம் செய்து, வீரம்பேசி சிறை சென்ற சமயங்களில் எல்லாம் இந்தப்படியே அதாவது இனி அந்தப்படி, எந்தப்படி? என்றால் 'என்ன காரியம்செய்து சிறை செல்ல வேண்டியவர்களானார்களோ அந்தக் காரியம் செய்வதில்லை' என்று வாக்குக் கொடுப்பதோடு அதற்கு மேலும் ஒத்துழைப்பதாகக் கூறியும், வாக்கு கொடுத்து விடுதலையாகி இருக்கிறார்கள். உப்பு சத்தியாக்கிரகத்திலும் இந்த மாதிரியே அதாவது சைமன் கமிஷனையும், வட்ட மேஜை மாநாட்டையும் பகிஷ்கரிக்கவும்; பகிஷ்கரித்த தன்மை கைக்காட்ட உப்புக் காய்ச்சியும் உப்பு சத்தியாக்கிரகம் செய்தும் சிறைசென்றவர்கள் சிறையினின்று வெளிவருவதற்கு ஆக, 'நாங்கள் இனி உப்புக் காய்ச்சுவதில்லை, சட்டம் மீறுவதில்லை, வட்ட மேஜை மாநாட்டுக்கும் போகிறோம். அன்று சென்ற பழைய நடவடிக்கைகளை தப்புக்கொண்டு மேலால் நடப்பதில் கவனித்துக்கொள்கிறோம்' என்று வாக்குக்கொடுத்த பின்பே யாவரும் விடுதலை ஆக நேர்ந்தது. அந்தப்படி சரணாகதி வாக்குக்கொடுத்து வட்டமேஜை மாநாட்டுக்குச் சென்றும் அவர்களுக்கு நடந்த பலன் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. ஆனால் அது 37ம் வருஷம் எலக்ஷனில் ஏகபோகமாய் ஜெயிக்க முடிந்தது. அந்த ஜெயமும் 27 மாதத்தில் காற்றாய்ப்பறந்து பழையபடி ஜெயிலுக்குப் போகவேண்டியதாய் விட்டது.

அதுபோல்தான் இந்தத் தடவை அஹிம்சையென்றும், யுத்தம் கூடாது என்றும், பாசிஸ்ட் ஜெயித்தால்தான் நல்லது என்றும் சர்வ தேச-வேதாந்தம் பேசி 'யுத்தத்திற்கு மக்கள் பணம் கொடுக்கக் கூடாது, பட்டாளத்தில் சேரக் கூடாது' என்றெல்லாம் பேசி, பெரியதொரு நாசவேலை செய்து சிறைக்குச் சென்றவர்கள் கண்ட வெற்றி என்னவென்றால் 'இனி நாசவேலை செய்வதில்லை' என்றும், 'ஒத்துழைக்கின்றோம்' என்றும் வாக்குக் கொடுத்துவிட்டு வெளிவந்ததேயாகும். அரசியல் தன்மையில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டதா என்றால் பல புதிய கட்சிகள், பல புதிய பிரச்சினைகள் ஏற்பட்டு நிலைமை சிக்கலானதோடு உலகம் பழிக்கவும், இழிக்கவுமான நிலைமை ஏற்பட்டதைத் தவிர வேறு பலன் அரிதாகிவிட்டது.

இந்த நிலையில் காங்கரசுக்குள் குழப்பமும் ஏற்பட்டுவிட்டது. பம்பாய் மாகாணத் தலைவர் தேசாய் பிரிந்துவிட்டார், அல்லது விலக்கப்பட்டுவிட்டார். சென்னையில் ஆச்சாரியார் பிரிந்துவிட்டார், அல்லது விலக்கப்பட்டுவிட்டார். இவர்கள் இருவரும் காங்கரசால் வையப்படுகிறார்கள், மற்ற மாகாணச்செய்தி இரகசியத்தில் இருக்கிறது.

காங்கரஸ் முஸ்லிம்களும் மௌலானா ஆசாத், ஆசப் உபயத்துல்லா சாபு இருவர் தவிர மற்றவர்களும் பிரிந்து விடலாம். சென்னை காங்கரஸ் பார்ப்பனரல்லாதார் நிலையும் சங்கடத்தில் இருக்கிறது. சென்னைக்கு சரியான தலைவர்கள் இல்லை. பட்டாபி, பிரகாசம் ஆகிய வெத்து வேட்டுக்கள் பேச்சோடு சரியே ஒழிய சென்னையில் மதிப்பாரில்லை; பத்திரிகை விளம்பரம் இல்லாவிட்டால் இவர்கள் வாழ்க்கையே சங்கடமாகிவிடும்.

இந்த நிலையில் இன்று காங்கரஸ் இருந்து கொண்டு தோல்வியும், பழிப்பும், இழிவும் ஏற்பட்டதையெல்லாம் ஒரு ராட்டினம், பிடி கதர், திரி தக்ளி என்றும், பஜனை, பிரார்த்தனை, மவுனம் என்றும் பேசிக்கொண்டு மக்களை ஏய்க்கவேண்டியதாக ஆகிவிட்டது.

அன்றியும் இப்போது எலக்ஷன் இல்லாததால் காங்கரசுக்கு வேலை என்ன?, செய்யவேண்டிய திட்டம் என்ன?, என்பதும் "பெருத்ததிவு"ம் போட்டி பிரச்சினையாக ஆகிவிட்டது. பத்திரிகைகள் பால்வார்த்தாலொழிய வாழ வழியில்லை என்ற நிலைக்கு காங்கரஸ் வந்துவிட்டது.

ஆகவே காங்கரஸ் கண்ட பலன் சரணாகதிதான் மிச்சம். என்னே காங்கரசின் பரிதாபநிலை! ஆகவே காங்கரசிலுள்ள திராவிட மக்கள் இனியாவது யோசனை செய்து திராவிடநாடு சுயராஜ்யமும் சுயமரியாதையும் பெறத் துணிவார்களா?

# இமிடேஷன் சுயமரியாதைச்சங்கம்

சமீபத்தில் மதுரையில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதாகத் தெரியவரும் சுயமரியாதைச் சங்கம் என்பது, இதுவரை இருந்துவருகிற சுயமரியாதைச் சங்கத்திற்கு சம்பந்தப் பட்டதல்ல. அதன் நடவடிக்கைகள் எதுவும் ஏற்கனவே சுமார் 20-வருட காலமாக இருந்துவரும் சுயமரியாதைச் சங்கத்திற்கு கட்டுப் பட்டதல்ல என்பதை ச. ம. காரருக்கும் பொதுமக்களுக்

ஆராய்ச்சி

கும் தெரிவித்துக் கொள்கி றோம்.

குறிப்பு:

இந்த விளக்கம் பல தோழர்கள் நம்மை எழுதி கேட்டதை ஒட்டி தெரிவிக்கப் பட்டதாகும்.

## ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ராமசாமி சேலம், விருத்தாசலம், புதுச்சேரி, கடலூர் ஆகிய ஊர்களில் இவ்வாரம் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு 24-ந் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார், மறுபடியும் 27-ந் தேதி இரவு புறப்படுகிறார்.

28-ந் தேதி பொன்மலை திராவிட மாணவர் கழக ஆண்டு விழா தலைமை.

29-ந் தேதி திருச்சி உறையூர் பொதுக்கூட்டம்,

30-ந் தேதி ஈரோடு.

2-ந் தேதி கரூர் சுயமரியாதை மாநாடு.

ஆகியவற்றிற்குச் சென்றுவிட்டு 3 அல்லது 4-ந் தேதி ஈரோடு திரும்புவார்.

## இவ்வார நிகழ்ச்சிகள்

### சொற்போர் கூட்டம்

கும்பகோணம் திராவிட இளைஞர் சொற்போர் கழகம் 29-7-45ந் தேதி மாலை 6.30 மணிக்கு கும்பகோணம் டவுன் ரயில்வே ரோடு "மோகன் நிலையத்"தில் கூடும் அதுசமயம் "மதம் மக்களுக்கு அவசியமா?" என்பது பற்றி சொற்போர் நடைபெறும்.

o o

### திருமணம்

கன்னிக்கோட்டை கண்ணுசாமி பண்டிதர் குமாரன் தோழர் நாராயணசாமிக்கும், திருச்சி ஸ்ரீரங்கம் லேட் ரெங்கசாமி பண்டிதர் குமாரத்தி தோழர் பத்மாவுக்கும் திருச்சி சங்கரம் பிள்ளை ரோடு கருணாநிதி பார்க்கில் தோழர் ஜே. எஸ். ராமராஜம் பி. ஏ., பி. எல்., தலைமையில் 29-7-45 மாலை 6மணிக்கு திருமணம் நடைபெறும்.

o o

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 28-7-45ந்தேதி வரை 33815 அங்கத்தினர்கள் ரூ. 3351—6—0 சந்தா

ஜூலை மாதம் 28-ந் தேதி வரை திராவிட கழகத்தி(ற்கு) (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வந்துள்ள சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 6008 | 9. சென்னை | 1822 |
| 2 தஞ்சை | 5953 | 10. மதுரை | 1481 |
| 3. சேலம் | 4579 | 11. செங்கல்பட்டு | 900 |
| 4 திருச்சி | 4235 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சில்நாடு) | 216 |
| 5 இராமநாதபுரம் | 2318 | 13. பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2270 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென்ஆற்காடு | 1919 | | |
| 8. வடஆற்காடு | 1844 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 33815. சந்தா ரூ. 3351-6-0.

### திறப்பு விழா

சென்னை தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் பெரம்பூர் பாரக்ஸ் கிளை சங்கத்திறப்புவிழா, 29-7-45 தேதி மாலை 7மணிக்கு தாதா சாஹுக்காரன்சேக் மொஹிதீன் சுபேதார் தெரு சால்வதி சபா கட்டிடத்தில் தோழர் B. பரமேஸ்வரன் தலைமையில் தோழர் முத்து சத்தியவாணி அம்மையாரால் நடத்தி வைக்கப்படும்.

o o

### சு. ம. சங்கக் கூட்டம்

திருவாரூர் சு. ம. நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 31-7-45 மாலை 6 மணிக்கு காடார் வீடுதியில் நடைபெறும். பல விஷயங்கள் ஆலோசிக்கவேண்டியிருப்பதால் இதனையே அழைப்பாகக் கொண்டு யாவரும் வரக் கோரப்படுகிறது.

o o

### பொதுக் கூட்டம்

பொன்மலைமேலக்கற்கண்டார் கோட்டை திராவிடர் கழகத்தினரால் 4-8-45-ந் தேதி மாலை 6½ மணிக்கு திராவிடர் மைதானத்தில் புரட்சிக் கவி பாரதிதாசன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத்; எஸ். கே. சாமி, டாக்டர் டி. சிவப்பிரகாசம் முதலியவர்கள் பேசுவார்கள். பெரியாரும் தோழர் சி. என். ஏ. அவர்களும் கலந்து கொள்வார்கள்.

### தென்னாற்காடு மாவட்ட திராவிடர் கழகம்

ஷை கழகத்திற்கு நிர்வாகஸ்தர்களைத் தெரிந்தெடுப்பதற்காகத் திராவிடர் கழகப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று விழுப்புரம் சேர்மன் ஜி. என். கோவிந்தராசலு அவர்கள் இல்லத்தில் 5-8-45-ல மாலை 4 மணிக்கு நடைபெறும். ஒவ்வொரு கழகத்திலிருந்தும் குறைந்தது ஒரு பிரதிநிதியாவது அனுப்ப வேண்டுகிறேன்.

திட்டக்குடியில் திராவிடர் மாநாடு நடத்துவது பற்றியும் அங்கு ஆலோசிக்கப்படும்.

யாவரும் இதனையே அழைப்பாக ஏற்றுத் தவறாமல் வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆ. திராவிடமணி,
அமைப்பாளர், கடலூர்.

### அடுத்த வாரம்

திருநெல்வேலி ஜில்லாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாத்தில் சேர்ந்த சேதியைப்பற்றிய விஷயங்கள், நெல்லூர் பெரியார் கூட்ட நிகழ்ச்சியின் பிற்பகுதி முதலியன இவ்வாரம் இடமில்லாததால் அடுத்தவாரம் 'குடி அரசி'ல் வெளியாகும்.

# சுயமரியாதை மாநாடு கரூர்

கரூர் தாலுகா சுயமரியாதை மாநாடு கரூர் ''அம்பிகா டாக்கீஸ்'' கொட்டகையில் 2—8—1945ந் தேதி வியாழக்கிழமை காலை 9மணி முதல் மாலை 5மணிவரை நடைபெறும்.

தலைவர்: திருச்சி வக்கீல்

**தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ. அவர்கள்**

திறப்பாளர்: ''திராவிடநாடு'' ஆசிரியர்

**தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள்**

கொடியேற்றுபவர்: பழயகோட்டை இளையகுமார பட்டக்காரர்

**தோழர் என். அர்ச்சுனன் அவர்கள்**

பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர்கள் செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் டி. சண்முகம், கும்பகோணம் கே. கே. நீலமேகம், பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி, திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி, சேலம் கே. ஜெகதீசன், டாக்டர் கே. ஆர். கோபால், ஜோலார்ப்பேட்டை பார்த்தசாரதி, கடலூர் திராவிடமணி, விருதுநகர் வ. சி. பி. ஆசைத்தம்பி, திண்டுக்கல் ல. வீராசன் முதலிய பல ஜில்லா இயக்கப் பிரமுகர்களும், மாணவத் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., நெடுஞ்செழியன் பி. ஏ., (Hons) திருவாரூர் மு. கருணாநிதி, எஸ். கருணானந்தம், எஸ். தவமணி, அ. மணி முதலானவர்களும் வருவார்கள்.

இரவு கமிட்டிக் கூட்டம் நடைபெறும். சுயமரியாதை இயக்க அன்பர்கள் அனைவரும் அவசியம் வரவேண்டுமாய் வேண்டுகிறோம்.

மாநாட்டுக்கு ஒலிபெருக்கி உண்டு.

கோவிந்தராஜு,
நக்கீரர், காரியதரிசிகள்.

என். ரத்தினம்,
வரவேற்புக்கழகத் தலைவர்.

---

## தேர்தலும் பெயர் மாற்றமும்

சேலம் ஜில்லா தெ. இ. ந. உ. சங்கத் தேர்தல் கூட்டம் 29-7-45ந் தேதி இரவு 9 மணிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் தேர்தலும் பெயர் மாற்றமும் நிகழும்.

ஜி. பி. சோமசுந்தரம்,
தலைவர்.

பி. ஆர். சோமசுந்தரம்,
செயலாளர்.

## பெண்மலை சுயமரியாதைச் சங்கம்

17-6-45-ந் தேதி திருச்சி நகர மண்டபத்தில் பெரியார் தலைமையில் கூடிய சுயமரியாதை அன்பர்கள் கூட்டத் தீர்மானப்படியும், 7-7-45 'குடி அரசி'ல் சுயமரியாதைச் சங்க திருச்சிமாவட்ட அமைப்பாளர் அறிக்கைக்கிணங்கவும், 10-7-45 மாலை வி. கோபால் தலைமையில் பெண்மலை சுயமரியாதை அன்பர்கள் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பெண்மலை பழய சு. ம. சங்கத்தைப் புதுப்பித்து, தலைவர் டி. என். முத்துக்குமாரசாமி, உபதலைவர் வி. கோபால், காரியதரிசி சி. மு. நாராயணசாமி, உபகாரியதரிசி ஜி. வெங்கடாசலம் ஆகியவர்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தை இக்கூட்டம் கண்டிப்பதுடன் சேலத்தில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டை இக்கூட்டம் ஒப்புக்கொள்வதுடன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களையும் அழைத்து இவ்வூரில் பெரியதொரு பொதுக் கூட்டம் சிறப்பாக நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## கோபி மருத்துவர் மாநாடு

9-7-45-ல் கோபி திருமுருகன் டாக்கீஸில் கோபி தாலுகா முதலாவது மருத்துவர் மாநாடு விமரிசையாக ஆரம்பமாயிற்று.

ஈரோடு தோழர் எஸ். அப்பாவு கொடியேற்றிவைத்தார். வரவேற்புக் கமிட்டித் தலைவர் தோழர் எ. ரங்கசாமி எல்லோரையும் வரவேற்றார். தோழர் இ. மாணிக்கம் மாநாட்டைத் திறந்து வைத்தார். பின்பு மாநாட்டிற்குத் திருச்சி தோழர் க. பிச்சைமுத்து தலைமை வகித்து மருத்துவரின் முற்கால, தற்கால நிலைமையையும், அவர்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும் பேசினார்.

பின்னர் திருச்சி தோழர் எஸ். சிவலிங்கம், பண்டித என். எஸ். ஆனந்தம் படத்தைத் திறந்துவைத்துப் பேசினார். தோழர் ஜி. என். இராஜு 'சமூக ஒற்றுமை' என்பது பற்றிப் பேசினார். ஈரோடு தோழர் என். வி. முத்து, திருச்சி தோழர் வி. பெருமாள், எ. வி. பெரியண்ண் ஆகியோர் பேசினார்கள்.

பிறகு சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, தலைவர் பின்னுரையுடன் காரியதரிசி நன்றி கூற மாநாடு இனிது முடிந்தது.

## பெரியார் இளைஞர் கழகம்

சேலம் செவ்வாய்ப்பேட்டை அர்த்தநாரி செட்டி தெருவில் 'பெரியார் இளைஞர் கழகம்' என்ற ஓர் கழகத்தை 9-7-45-ல் ஆரம்பித்து அன்று பெரியார் அவர்கள் படத்தை இரதத்தில் வைத்து முக்கிய தெருக்களில் ஊர்வலம் வந்தது.

இதை நடத்தியவர்கள் பத்து வயது சிறுவர்களே.

---


## திராவிட நாட்டுப் புரட்சிக் கவிஞர்

அவர்கள் உருவமைந்த அழகிய படம் நல்ல முறையில் வெளியிட்டுள்ளோம். கவிஞர் அவர்கள் கையெழுத்துடன் அமைந்துள்ளது. ஒன்றின் விலை 0-2-0 மாதிரிபெற 0-2-9பில்லைகள் அனுப்புக. விற்பனையாளர்களுக்கு தக்க லாபம் தரப்படும். விலாசம்:-

திராவிடன் பதிப்பகம்,
தபால்பெட்டி 18, வேலூர், வ. ஆ.

## ஜெயராம் ஆயக்காந்த லேகியம்

உடல் வெளுத்து வீக்கும் சோகை, பாண்டு, காமாலை, பேதி, பொருமல், அதிசாரம், கிராணி, மூச்சுத்திணறல், படபடப்பு, குத்துவலி, பித்தம் முதலிய நோய்களை நீக்கி, பசியையும் இரத்த விருத்தியையும் அளித்து உடலை இறுகச் செய்யும்.

1சேர் ரு. 5-0-0. ½சேர் ரு 2-10-0
V. P. P. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசி விஸ்வநாதர் கீழவீதி,
கும்பகோணம்.


ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உனக்குத் தொல்லை கொடுக்க முடியும், இந்தியாவில் மாத்திரமல்ல வெளியிலும் கூட தொல்லை ஏற்படுத்த முடியும்,"

என்று சொன்னதால் அதற்கேற்றபடி முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்ததால் இதை வெள்ளையர் (பிரிட்டிஷார்) ஒப்புக்கொண்டது மாத்திரமல்லாமல் மஞ்சள் ஆரியரும் வழிக்கு வந்து "உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள், என்னை நம்பின இரண்டொரு சாயபு இடம் என் மரியாதையைக் காப்பாற்று," என்று அவருக்கு வந்துவிட்டார்கள்.

## நாம் செய்யவேண்டியது என்ன?

அந்த நிலை நமக்கு ஏற்படவேண்டுமானால் நாம் என்ன செய்யவேண்டும்? அதைத் தெளிவாக்கத்தான் திராவிடர் கழகம் தொண்டாற்றுகிறது. நமக்கு இன்று நம் நாட்டில் இருந்துவரும் கஷ்டத்திற்கு காரணம் நம் மக்கள் தங்கள் பிறவியையும் இனத்தையும் தங்களுக்கு இருக்கவேண்டிய சுயமரியாதையையும் உணராத்தன்மையேயாகும். இதனால் தான் நம்மில் அநேகர் பிறவி-இன-சுயமரியாதையைப் பற்றி இலட்சியம் இல்லாமல் சுயநலம் என்னும் பேரால் தாங்கள் மானத்தைவிட்டு அல்லது விற்றுப் பிழைப்பதைப் பெருமையாகக் கொண்டொழுகக் கருதுகிறார்கள். உலகத்தில் வேறு எந்தமக்களுக்காவது நம்மைப்போல் இழிவுக்கு ஆளாகி அதைப்பற்றிக் கவலைபற்று வாழ்விலில்லை. நம்மில் ராஜாக்களையும், மகாராஜாக்களையும், மகாமகாராஜாக்களையும், ஜமீன்தார்களையும், கோடீஸ்வரர்களையும், ஏ...களையும் பாருங்கள், யாருக்காவது இன உணர்ச்சி, இழிவு பற்றிய துடிப்பு இருக்கிறதா? இவர்கள் எல்லோரும் இனஇழிவுக்கும், பிறப்பு இழிவுக்கும், ஆகவும் மனிதத்தன்மை மானத்திற்கும் கேடு விளைவிக்கவும் நம் எதிரிகளால் கற்பித்த சாதனமாயிருக்கும் மதம் (கொள்கை) என்பதைத் தங்கள் மதம் (எங்களது கொள்கை) என்று சொல்ல வெட்கப்படவில்லை என்று வீரம் பேசுகிறார்கள். அதைப் பின்பற்றி எதிரிக்கு நல்ல பிள்ளை ஆகி பயன் பெறுகிறார்கள். மகாராஜாக்கள், பிரபுக்கள், கோடீஸ்வரர்கள், படித்தவர்கள் என்பவர்களே இப்படி இருந்தால் மற்றவர்களைப் பற்றி அதுவும் வயிற்றுப் பிழைப்புக்கும், வாய் குடிக்கும் எதையும் விற்றுப் பிழைப்பவர்களைப் பற்றிக் கேட்கவேண்டுமோ என்று கேட்கிறேன்.

## திராவிடக் கழகம் ஏன்?

ஆதலால், மத பிறப்பையும், இனத்தையும் ஞாபகமூட்டுவதே திராவிடக் கழகத்தின் முக்கிய வேலையாகும். 1. முஸ்லிம் மதம் (இஸ்லாம்), 2 முஸ்லிம் ஜாதி, 3. முஸ்லிம் நாடு, 4. முஸ்லிம் மானத்தோடு வாழ்வதா சாவதா? ஆகிய இவைகளை ஞாபகப்படுத்தி இவைகளைக் குறிச்சொல்லாகக் கொண்டதாலேயே 40 கோடி மக்கள் உள்ள இந்திய நாட்டில் 10 கோடி மக்கள் கொண்ட முஸ்லிம்களுக்கு சரி பங்கு உரிமை, தனி ஆட்சி நாடு என்கின்ற வலியுறுத்தல் யாராலும் ஆக்ஷேபிக்க முடியாத ஆட்சேபிக்க பயப்படும்படியான பிரச்சினையாக இருந்து வருகிறது.

அதுபோலவே 1. இந்துமதம் அதாவது (ஆரியக்கொள்கை) மதம் 2 இந்து (ஆரிய) இனம், 3. இந்து (ஆரிய) ஸ்தானம் 4 இந்து (ஆரியராம) ராஜ்ஜியம் 5. இந்து (பார்ப்பன) ஆதிக்கம் என்கின்ற குறிச்சொல்லே ஆரியர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) இவ்வளவு, அதாவது அவர்களது எண்ணிக்கை 100-க்கு 4, 5 ஆக இருந்தும் நாடு முழுவதும், ஆதிக்கம் முழுவதும், வளம் முழுவதும் அவர்களுடையதாகவும் மற்றவர்கள் அவர்களது "கூலிப் பாட்டி மக்கள்" சூத்திரர்கள் தீண்டப்படாதவர்கள் என்பதைத் தாங்களாகவே ஒப்புக்கொள்ளும்படியாகவும் செய்யப்பட்டு விட்டது.

இதுபோன்ற உணர்ச்சியும், நிலையும் நமக்கும் ஏற்படவேண்டும். அதற்கேற்ற குறிச்சொல் நமக்கு வேண்டுமென்பதற்கு ஆகவே திராவிடக் கழகம் வேலை செய்கிறது. இந்தப் பெயர் பிடிக்காவிட்டால் வேறு எந்தப்பெயரைத்தாலும் சரி இழிநிலையை வெட்டித்தள்ளும்புரட்சி உணர்ச்சி வரும்படியாக இருக்கவேண்டும். மற்ற எந்தப் பெயராலும் இதுவரை பயன் ஏற்படவில்லை. ஆதலால் இந்தப் பெயரை சொல்லுகிறேன். இதுவும் மறந்ததை நினைவுறுத்துவதே தவிர புதிய கற்பனை அல்ல. நாம் யாவரும் திராவிடர் திராவிடர் யாவரும் ஒன்று. ஆரியருக்கும்... ஆரியத்திற்கும் நாம் எந்த விதத்திலும், எந்த தன்மையிலும் சம்மந்தப்பட்டவர்கள் அல்ல என்று கருதி, 1. திராவிட நாடு, 2. திராவிட இனம், 3. திராவிடமானம் 4. திராவிடர் இருப்பதா இறப்பதா என்ற உணர்ச்சி நமக்கு வந்துவிட்டால் திராவிடருக்கு இந்த நாட்டில் மாத்திரமல்ல இந்தியா கண்டத்திலேயே யார் என்று கேட்கின்றேன்.

இன்னமும் சொல்லுவேன். ஆரியஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் நம் நாட்டில் இடமில்லை நமக்கு இரண்டும் சம்மந்தமும் தேவையும் அற்றதாகும். ஏன்? நமக்கும் முஸ்லிம்களுக்கும் நம்நாட்டில் சண்டை இல்லை. நாமும் அவர்களும் ஒரு இனம், ஒரு ஜாதி. மத உணர்ச்சியில் அதுவும் நாம் ஆரிய மத உணர்ச்சி கொண்டதால் வேறுபட்டவர்களாக கருதிக்கொள்ளுகிறோம் அப்படி இருந்தும் நாம் உடன்பிறப்பாளர்களைப் போல் வாழ்கின்றோம். ஆரியம் நம்மை விட்டு ஒழிந்தால் மதத்திலும் பேதமிருக்காது. இங்குள்ள முஸ்லிம்கள் நம்மை விட்டுப் பிரிந்துவாழவோ நம்மை இழிவுபடுத்தி வாழவோ சிறிதும் நினையார்கள். ஆதலால் நமக்கும் அவர்களுக்கும் பேத உணர்ச்சி இல்லை. கண்டிப்பாய் பேதம் வேண்டாததுமாகும். ஆதலால் திராவிடர் என்றதால் மகமதியர்களைப் பிரித்துக் காட்டுவதல்ல, பாகிஸ்தானை எதிர்ப்பதோ இந்த நாட்டுக்குக் கூப்பிடுவதோ அல்ல. ஆனால் திராவிடர் என்றால் ஆரியர் வேறு என்பதைக் காட்டுகிறது. ஆரிய மதம் நமக்கு இழிவானது என்பதைக் காட்டுகிறது. திராவிடநாடு என்பது ஆரியர்களின் காலடியில் இருந்தும், ஆரிய ஆதிக்கத்தில் இருந்தும் மீளவேண்டும் என்பதைக் காட்டுகின்றது. ஆகவே திராவிடர் ஒன்றுபடவேண்டும், ஒரு கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். திராவிடக் கட்டுப்பாடும் ஒற்றுமையும் ஏற்படுவதற்குத் தடையாய் உள்ள எதுவும் தள்ளப்படவேண்டும்.

## அரசியல்

இன்றைய அரசியலில் நமக்குப் பதவிப் பங்கு வேண்டியதில்லை. நம்மை வேவல் பிரபு கூப்பிடாததால் எனக்குச் சிறிதும் கஷ்டம் இல்லை. கூப்பிட்டிருந்தால் அவர்தான் ஏமாற்றமடைந்திருப்பார், நம் கட்சியில் இடைக்கால பதவிஏற்றுக்கொள்ளக்கூடாது என்று 1940ம் வருஷத்திலேயே தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. பதவிக்குஆக யோக்கியமான ஜஸ்டிஸ் கட்சிஒருவரும் ஆசைப்படுவதில்லை அது மாத்திரமல்ல தேர்தலைக்கூட பகிஷ்கரிக்கவேண்டும் என்று சொல்லி வருகிறேன். இப்படி இருக்க வேவல் கூப்பிடவில்லை என்று நினைப்பேனா? ஆனால் வேவல்பிரபுவுக்கு சரியான எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே பதவி விஷயம் என்னை எய்த்துவிடாது ஏமாற்றமடையவும் செய்யாது.

ஆனால் வேவல் திட்டத்தால், வேவல் பிரபு, ஜின்னா சாயபு, அம்பேத்கார், காங்கரசார், நான், ஆகிய ஐந்து பேரும் வெற்றி பெற்றுவிட்டோம்.

வேவலின் வெற்றி—என்னவென்றால் "வேவல் பிரபு நல்லவர் அவரால் குற்றமில்லை. சுயராஜ்ஜியத்திற்கு வழிகாட்டினார், நல்ல எண்ணத்தோடு வேலை செய்தார்" என்ற பெயரை காங்கரசாரிடம் வாய் நிறையப் புகழ்ச்சி வாங்கிக் கொண்டதோடு நாங்கள் இனி சட்டம் மீறமாட்டோம். சண்டை... முயற்சிக்கு எதிர்ப்பும் செய்ய மாட்டோம் என்கின்ற உறுதிமொழியையும் வாங்கிக் கொண்டார். இதை மெய்ப்பிக்க மௌலானா ஆசாத் அவர்கள் எனக்கும் வேவலுக்கும் நடந்த சங்கதி பரம இரகசியம் என்று சொல்லிவிட்டதே போதுமானது.

காங்கரஸ் பத்திரிகைகளும் தலைவர்களும் இதை ஒப்புக்கொண்டதற்கு

அடையாளமாக வேலைப் பாராட்டி விட்டன.

ஜின்னாவின் வெற்றி—என்னவென்றால் முஸ்லிம்களுக்கு இந்துக்களுக்கு உள்ளதுபோல் சமஉரிமை பங்கில் உண்டு என்பதல்லாமல் முஸ்லிம்களுக்கு முஸ்லிம்லீக் தவிர வேறுயாரும் பிரதிநிதித்துவம் அல்ல என்பதை உறுதிப்படுத்திவிட்டார்.

அம்பட்கருக்கு வெற்றி-என்னவென்றால் ஷெட்யூல் வகுப்புக்கும்-தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அம்பேத்கார் தான் பிரதிநிதி என்பதோடு காங்கிரஸ் பிரதிநிதித்துவம் கொண்டாடுவது சரியல்ல என்று செய்யப்பட்டுவிட்டது.

காங்கிரசாருக்கு என்ன வெற்றி- என்றால், முதலாவது தலைவர்கள் விடுதலையானார்கள். காங்கிரசை இயக்க, வேலை பிரசாரம் வேலை நடத்த இடம் செய்து கொண்டார்கள். வேறுயாரும் எந்தக் கட்சியாரும் கலந்திடாமல் நாட்டின் பேரால் பதவிக்கு வரத்தக்க பந்தோபஸ்து செய்து கொண்டார்கள்; காங்கிரஸ் ஆட்கள் காங்கிரசை விட்டு ஓடாமல் இருக்க வசதி செய்துகொண்டார்கள். பிரிட்டிஷாரோடு போராடுவதை விட்டுவிட்டு தன் மூலம் பிரிட்டன் உதவி கொண்டு முஸ்லிம் லீக்குடன் போர் தொடுக்க வசதி செய்து கொண்டார்கள்.

இனி நமக்கு வெற்றி- என்ன என்றால் இனப்படி, மதப்படி, வகுப்புப்படி எந்த அரசியல் பிரதிநிதித்துவமும் இருக்கவேண்டும் என்று போராடினவர்கள் இந்நாட்டில் நாமேயாகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு ஆதாரமாக காஞ்சிபுரத்தில் காங்கிரஸ் மகாநாட்டில் காங்கிரஸ் [illegible] உதறித்தள்ளி விட்டு, அம்மாநாட்டில், நாலாயிரம் பேர் இடையில் "காங்கிரஸ் இதற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் நான் அவமானப்படவில்லை. இதற்கு ஆகவே நான் வெளியேறி வேறு ஸ்தாபனம் ஆரம்பித்து வ. பி ஒப்புக்கொள்ளச் செய்கிறேனா இல்லையா பார்!" என்று பந்தயம்கூறி மீசையை முறுக்கிக் காட்டிவிட்டு வெளியில் வந்த என் பந்தயப் பிரச்சினை சிம்லா மாநாட்டில் வெளிப்படையாய் ஒப்புக்கொண்டு சமரசமாக்கப் பட்டுவிட்டது என்பதேயாகும். அதுவும்


# திராவிடத்தலைவர்

நமது தலைவர் பெரியார் அவர்களின் உருவமைந்த பேட்ஜ் அழகிய அமைப்பிலும், உயர்ந்த முறையிலும் மீண்டும் வெளிவந்துள்ளது.
ஒன்றின் விலை 0-1-0. வியாபாரிகளுக்குத் தக்கலாபம் தரப்படும்.
விபரங்களுக்கு:- திராவிடன் பதிப்பகம், தபால்பெட்டி 18, வேலூர். வ. ஆ.


நம் விகிதப்படி என்றால் இன்னும் மகிழ்ச்சியல்லவா?

முஸ்லிம்கள் பகுதி கேட்டது சரியா என்று கேள்வி கேட்கப்படுகிறது. முஸ்லிம்கள் கேட்டது நியாயமான 3-ல் ஒன்று; ஆனால் காங்கிரசின் கூட்டியாக அக்கிரமத்தால் அவர்களுக்கு சரிபாதி ராஜ்ஜம் கொடுக்கப்படுகிறது. அப்படித்தான் இருந்தாலும் காங்கிரசின் யோக்கியதைக்கு அது எப்படித் தப்பாகும்? இந்த நாட்டில் நாம் திராவிடர் 100க்கு 90பேர்கள், பார்ப்பனர் 100க்கு 3பேர் இது கணக்கு, அப்படி இருக்க பார்ப்பனர் சட்டசபையில் எவ்வளவு? மந்திரியில் எவ்வளவு? ஹைகோர்ட் ஜட்ஜுகளில் எவ்வளவு? சென்ட்ரல் போர்டில் I. C. S. எவ்வளவு? முக்கிய உத்தியோகத்தில் எவ்வளவு? ஆச்சாரியார்களில் எவ்வளவு? ஓட்டலில் எவ்வளவு? ஒதுக்கி வைத்திருக்கும் அரம் எவ்வளவு? இந்த விகிதாச்சாரங்களைப் பார்த்தால் முஸ்லிம்கள் இன்னும் அதிகம் கேட்கலாம்.

எங்களைத் தன் இனம், தன் மதம், தன் குடும்பமென்று சொல்லி உரிமை கொண்டாடும் ஆரியர்கள் எங்களையே மோசம் செய்து எங்கள் பங்கையும் கொள்ளை கொண்டு எங்களையும் கீழ்ஜாதியாக ஆக்கிப் பயன்பெறும்போது இது நியாயம் என்றும், தகுதிக்கு ஏற்ற கூலி என்றும், சுதந்திரத்திற்கு ஏற்ற மரியாதை என்றும், சொல்லுகிறவர்கள் இப்படிப்பட்ட எங்களை (இந்த ஆரியர்களை, முஸ்லிம்கள் அதைவிட பலசாலிகள், கட்டுப்பாடு உடையவர்கள், பிறரால் ஜீவித்த உரிமை உடையவர்கள் என்று கருதிக்கொண்டு) முஸ்லிம்கள் அதிகம் கேட்பதில் தப்பு என்ன என்று கேட்கிறேன். இந்தமாதிரி முஸ்லிம்கள் கேட்பதில்

நமக்கு நஷ்டம் என்ன என்றும் கேட்கிறேன்.

முஸ்லிம் பாகிஸ்தான் கேட்பதும் பகுதி கேட்பதும் வடநாட்டுப் பிரச்சினையே ஒழிய நமக்கு சம்மந்தப்பட்டதல்ல.

முஸ்லிம்கள் முதலில் தாங்களும் பங்காளிகள் என்பதை ஒப்புக்கொள்ளச் சொன்னார்கள். காங்கிரசார் அதை மறுத்தார்கள். அது முற்றி பாகிஸ்தானாய் கேட்டார்கள்; அது மறுக்கப்பட இப்படி சரி பகுதிக்கு டிமாண்ட் போட்டு வந்து அதுவும் ஒப்புக்கொண்டாய்விட்டது. ஆனால் இந்தக்காங்கிரசு (ஆரியர்கள்) நமக்கள் விண்ணப்பத்தைக் கவனிப்பதாகட இல்லை அப்பேர்ப்பட்டதாகவது இன, வகுப்பு, மதப் போராட்ட நாட்டில் திராவிடரைப் பற்றியோ திராவிட நாட்டைப் பற்றியோ யாரும் சற்றும் சிந்திக்கவில்லை.

வைசிராய் திட்டத்திற்கு பண்டிதர் நேரு பெயரும், அவர் தங்கை பெயரும், பட்டேல் பெயரும், பிரசாத் பெயரும், [illegible] பெயரும், மற்றும் வடவர் பெயரும் அடிபட்டதே தவிர திராவிட நாட்டின் பேர் அடிபடவே இல்லை. காங்கிரஸ்காரர் என்கின்ற முறையிலாவது ஆச்சாரியார் பேரோ, அண்ணாமலை பிள்ளை பேரோ குறிப்பிடவில்லை. அண்ணாமலை பிள்ளை பார்ப்பனரல்ல என்று சொல்லலாம். ஆனால் ஆச்சாரியாரை ஒதுக்கியது என்ன காரணம்? எது இடத்திலும் வடநாட்டார் அனுபவிக்க வேண்டியது என்பதல்லாமல் காங்கிரசின் தத்துவம் வேறு இல்லை என்பதற்கு இதைக் கூறுகிறேன்.

தென்னாட்டு பார்ப்பனர்கள் தங்களுக்கு ஏதாவது நாட்டு அபிமானமோ சுயமரியாதை அபிமானமோ இருந்தால் இக்குமாரர் திராவிடநாடு விடுதலை அடைய அதாவது வடநாட்டார் ஆதிக்கத்தில் இருந்து விடுபட முயற்சிசெய்ய வேண்டியதுதான் அறிவுடைமையாகும்.

திராவிடர்கள் சுயமரியாதை பெற வேண்டுமானால் கட்டுப்பாடும் ஒற்றுமையும் வேண்டும், சட்டத்திற்கோ சிறைக்கோ பயப்படக்கூடாது என்று ஆட் பேசினார்.


திருத்துறைப்பூண்டி தமிழ் நாடக விலாஸ்த்தாரால்,
திருவாரூர் கருணாநிதி தியேட்டரில், 4-8-45; 5-8-45 சனி, ஞாயிறு
இரவு 10-30மணிக்கு
புதுமைக் கருத்துக்கள் நிறைந்த
"போர்க்கொடி"
என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெறும்

# திராவிடக் கழகங்கள்

தஞ்சை திராவிட இளைஞர் கழகத்தின் மாதாந்திரக் கூட்டம் 25-6-45-ந் தேதி தோழர் சா. அழகிரிசாமி தலைமையில் நடைபெற்றது. அதுசமயம், சேலம் மாநாட்டை ஆதரித்தும், சென்னையில் நடைபெற்ற போலி மாநாட்டைக் கண்டித்தும், தனியாக சுயமரியாதைக் கட்சியைப் பிரித்துவிடச் செய்யும் முயற்சியைக் கண்டித்தும், தற்போது மே. த. வைசிராய் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வேவல் திட்டத்திற்கு திராவிடர் கழகத் தலைவரான பெரியார் ஈ. வெ. ரா-வை அழைக்காததனால் அது ஆறு கோடி திராவிட மக்களை கட்டுப்படுத்தாது என்றும், விசேஷ மாநாட்டை தஞ்சையில் கூட்டுமாறு பெரியார் அவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

0 0

6-7-45-ந் தேதி நாகூர் திராவிடர் கழக முன்னிலையில் தோழர் பழனியாண்டி தலைமையிலொரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ் இசைப்பாட்டுகள் பாடிய பின்னர் தோழர்கள் புலவர் மு. செ. குபுதீன், எஸ். கருணானந்தம் இந்து மதமும், திராவிடர்களும் என்பது பற்றிப் பேசினார்கள். வெங்கிடங்கால் திராவிடர் கழகத்தினரால் தோழர் ஈ. வெ. கி. சம்பத்துக்கு ஒரு வரவேற்புத் தாள் வாசித்தளிக்கப்பட்டது. தோழர் சம்பத் வேவல் திட்டமும், அரசியலும் என்பது பற்றி விளக்கமாகவும், உணர்ச்சி ததும்பும் முறையிலும் அரிய சொற்பொழிவாற்றினார். திராவிடர் கழகம் எனப்படும் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவரான பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைக் கலந்து கொள்ளாமல் செய்யப்படும் எந்தத் திட்டத்தையும், 4½ கோடி திராவிட மக்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. 9-7-45-ந் தேதி மே. த. வைசிராய்க்கும் அனுப்பப்பட்டது.

0 0

1-7-45-ல் நடைபெற்ற திருவண்ணாமலை திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டத்தில், தென்னிந்தியாவிலுள்ள 6-கோடி திராவிடர்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்தது திராவிடர் கழகத்தின் (ஜஸ்டிஸ் கட்சியின்) தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைக் கலந்தாலோசியாமல் செய்யப்படும் எந்த நடவடிக்கையையும் தாங்கள் ஒப்புக்கொள்வதில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதை வைசிராய்க்குத் தந்தி மூலம் தெரிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

0 0

3-7-45-ல் அத்தக்குடி கே. எ. பி. விசுவநாதம் வாலிபர் சங்கக் கூட்டம் தோழர் எம். ரத்தினம் தலைமையில் கூடியது. தோழர்கள் வி. வீரசிகாமணி, ந. பிச்சை முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். பின், "எங்கள் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைக் கலக்காமல் சிம்லாவில் மே. த. வைசிராய் நடத்தும் மாநாட்டின் முடிவு தென்னாட்டிலுள்ள திராவிடர்களைக் கட்டுப்படுத்தாது" என்று தீர்மானிக்கப்பட்டது.

0 0

காரைக்குடி நகர திராவிடர் கழகக் கூட்டம் 5-7-45-ந் தேதி திராவிடர் கழகத்தில் தோழர் ராமசுப்பையா அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம் 6 கோடி திராவிடர்களின் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைக் கலந்துகொள்ளாது நிறைவேற்றப்படும் சிம்லா மாநாட்டின் முடிவுகள் திராவிட மக்களைக் கட்டுப்படுத்தாது என்றும், மே மாதம் 7, 8 தேதிகளில் சென்னையில் சர் ஆர். கே. எஸ். தலைமையில் நடைபெற்ற போலி ஜஸ்டிஸ்மாநாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன், சட்டப்படி அப்போலி மாநாட்டிற்கும், ஜஸ்டிஸ் (திராவிடர்) கட்சிக்கும் யாதொரு தொடர்புமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டு மே. த. வைசிராய்க்கும், மே. த. கவர்னருக்கும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

0 0

சின்ன சேலத்தில் 4-7-45-ந் தேதி தோழர் எம். சீதாராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக பொதுக் கூட்டத்தில் புலவர் எழில்விளவன், ஜி. ஆர். கனகமணி, கருணாகரன் முதலியவர்கள் பேசிய பிறகு, சிம்லாவில் பெரியாரைக் கலந்தாலோசிக்காமல் நடைபெறும் மாநாடு தென்னாட்டுத் திராவிடர்களைக் கட்டுப்படுத்தாதெனத் தீர்மானிக்கப்பட்டு மே. த. வைசிராய்க்கு அனுப்பப்பட்டது.

0 0

வாழ்குடை திராவிடக் கழக குழுவிற்குத் தோழர்கள் வி. எஸ். கிருஷ்ணசாமி தலைவராகவும், கே. முனுசாமிக் கவுண்டர் உபதலைவராகவும், வி. கிருஷ்ணமூர்த்தி செயலாளராகவும், வி. எல்லப்பன் உதவி செயலாளராகவும், எம். தங்கவேலு பொருள் காப்பாளராகவும், 10 பேர் அங்கத்தினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

டை கழக சார்பில் தோழர் தங்கவேலு உடையார் முன்னவர் தோழர் அருணகிரி உடையார் காலம் சென்றமை குறித்து 25-5-45-ந் தேதி ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினார்கள். அன்னாரின் கீத்தார் கடன் புரோகிதமின்றி 4-6-45-ந் தேதி நடத்தப்பட்டது.

0 0

தஞ்சை நகர திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் எ. கே. ஆர். சாமி தலைவராகவும், எஸ். கோவிந்தசாமி உபதலைவராகவும், டி. கே. குருசாமி காரியதரிசியாகவும், 7 பேர் கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

டை கழகத்தின் சார்பாக, "ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைக் கலக்காமல் மே. த. வைசிராய் நடத்தும் மாநாட்டின் முடிவு தென்னாட்டிலுள்ள திராவிடர்களை கட்டுப்படுத்தாது என்று தீர்மானிக்கப்பட்டு மே. த. வைசிராய்க்கு அனுப்பப்பட்டது.

0 0

ஈரோடு நகர திராவிட கழகம் 5-7-45 தேதி கோவைஜில்லா திராவிடர்கழகச் செயலாளர் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் தலைமையில்கூடி நிர்வாகக் கமிட்டி தேர்தல் நடைபெற்றது.

0 0

தஞ்சை நகர திராவிடர் கழகத்தின் ஆதரவில் 1-7-45 மாலை 7 மணிக்கு பெரிய ஆஸ்பத்திரிக்கு எதிரிலுள்ள மைதானத்தில் தோழர் எஸ். ஆர். சுப்பண்ணா அவர்கள் தலைமையில் ஓர் சுயமரியாதைப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்களான ஈரோடு ஈ. வெ. கி. சம்பத், திருச்சி டி. கே. சீனிவாசன், தஞ்சை எம். கே. அஜீஸ் முதலியவர்கள் சமுதாயம், அரசியல், பொருளாதாரம் என்பவைகளைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

0 0

12-5-45-ஆம் தேதி வாணியம்பாடி, பெரியபேட்டை இளைஞர் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக, பாலாற்றில் ஓர் பொதுக்கூட்டம் கூடி அண்ணல்தங்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் எ. பி. ஜனார்த்தனம் எம். எ., புலவர் கண்ணன் ஆகியோர் 'தமிழும் தமிழ் நாடும்' என்பதைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

0 0

திருச்சி நகர திராவிடர் கழகக் கமிட்டிக்கூட்டம் கருணாநிதி பார்க்கில் 7-7-45ந் தேதி தோழர் என். சங்கரன் அவர்கள் தலைமையில் கூடிற்று. அதுசமயம் "தற்சமயம் சிம்லாவில் நடக்கும் மாநாட்டுக்கு இந்தியாவின் சகல கட்சித் தலைவர்களையும் வைஸ்ராய் பிரபு அவர்

கள் அழைத்து மாநாடு நடத்தும் சமயத்தில் சென்னை மாகாணத்தின் 4½ கோடி திராவிட ஜனங்களின் ஏக பிரதிநிதியும், திராவிட கழகத்தின் ஏக தலைவருமான பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை அம்மாநாட்டில் கலந்துகொள்ளச்செய்யாததைக்கண்டு இக்கூட்டம் மிகவும் வருந்துவதோடு அச்செய்கையை வன்மையாகக் கண்டிக்கிறது" என்று தீர்மானிக்கப்பட்டு மே. த. வைஸிராய்க்கும் அனுப்பப்பட்டது.

* *

நடராசபிள்ளை சாவடியில் 10-6-45ந் தேதி மாலையில் தோழர் ராமு அவர்கள் தலைமையில் தோழர்கள் பெரியதுரை, சாமிநாதன், இளஞ்செழியன், ராமச்சந்திரன், இராமலிங்கம், இளம்வழுதி முதலியவர்கள் பேசிய பின் தலைவர் முடிவுரையுடன், எஸ். டி. வைரக் கண்ணு நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

மற்றும் அன்று நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தலைவர்: ஆர். ரெங்கராசலு, செயலாளர்: வி. எஸ். ராசசு, பொருள்காப்பாளர்: டி. வைரக்கண்ணு; உதவி செயலாளர்: ஆர். சந்திரசேகரன், நிர்வாக உறுப்பினர்கள்: 5 பேர்.

* *

கரவை திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் 21-6-45-ந் தேதி வழக்கறிஞர் டி. கே. விஜயராகவலு பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் கூடியது. அது சமயம், "25-6-45-ல் சிம்லாவில் கூடும் வைஸிராய் மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் திராவிடர்களாகிய எங்களைக் கட்டுப்படுத்தாது" என்று தீர்மானிக்கப்பட்டு அதன் நகலை மே. த. வைஸிராய் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

o o

20-6-45ல் பொன்மலை மேலக்கல்கண்டார் கோட்டை திராவிடர் கழக கட்டிடத்தில் தோழர் ஆ. சுந்தரம் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் நமது கழக உறுப்பினரும் செயலாளர் கா. ஐயம்பெருமாள் மைத்துனருமான தோழர் ச. சின்னச்சாமி அவர்கள் திடீரென 18-6-45 மாலை இறந்ததை முன்னிட்டு அன்னார் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

o o

தோழர்கள் எஸ். பி. கலியன் தலைவராகவும்; எம். கே. ஹாஜிபீர் துணைத் தலைவராகவும் பொருளாளராகவும், ஜி. சண்முகசுந்தரம் செயலாளராகவும் மூன்று பேர்களை நிர்வாகக் குழுவினராகவும் கொண்ட திருத்துறைப்பூண்டி திராவிடர் கழகம் நிறுவப்பட்டது.

மதுக்கூர் திராவிடர் கழகக் கூட்டம் 30-6-45ல் காலை தோழர் என். பி. காளியப்பன் தலைமையில் கூடி, வருகிற வாரத்தில் மதுக்கூருக்கு வரும் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், புலவர் மாணிக்கம் முதலியவர்களை வரவழைத்து திராவிட கழகக் கூட்டம் கூட்டுவது என்பதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

* *

சென்னை நுங்கம்பாக்கம் திராவிடர் கழகக் கூட்டம் 1-7-45-ந் தேதி கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. தலைவர் தோழர் எஸ். பாலசுந்தரம் அவர்கள் தலைமைவகித்தார். அதுசமயம் "எங்கள் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமியை அழைக்காமல் சிம்லாவில் மே. த. வைஸிராய் அவர்கள் நடத்தும் மாநாட்டின் முடிவு தென்னாட்டிலுள்ள திராவிட மக்களை கட்டுப்படுத்தாது." என தீர்மானிக்கப்பட்டு மே. த. வைஸிராய்க்குத் தெரிவிக்கப்பட்டது.

* *

வாணியம்பாடி காதர்பேட்டை கிழக்கு திராவிடர் கழகத்திற்கு அடுத்த வருஷத்திற்கு தோழர்கள் பி. வடிவேலு தலைவராகவும், வ. ராகவன் உபதலைவராகவும், ஜி. பழனிமுத்து செயலாளராகவும், சி. அப்பாதுரை உதவி செயலாளராகவும், ஐ. மு. தங்கவேலு முதலியார் பொக்கிஷதாரராகவும், வ. ர. குப்புசாமி கவுண்டர், கணேச உடையார், எச். எஸ். ரங்கசாமி போஷகர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

காமகிரிப் பேட்டை திராவிடர் கழகம், சேலம் டவுன் திராவிடர் கழகம், கல்லக்குறிச்சி திராவிடர் கழகம், சேலம் அம்மாப்பேட்டை பனகால் திராவிடர் கழகம் ஆகியவைகளின் கூட்டங்களில் சிம்லா மகாநாட்டில் பெரியாரைக் கலக்காமல் செய்யப்படும் முடிவுகள் 6-கோடி திராவிட மக்களை கட்டுப்படுத்தாது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மே. த. வைஸிராய்க்கு தந்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

* *

நன்னிலம் தாலுகா திருப்புகலூர் கிராமத்தில் தோழர்கள் துரைசாமியை தலைவராகவும், கோவிந்தராஜுலுவை காரியதரிசியாகவும் கொண்ட திராவிடர் கழகம் நிறுவப்பட்டிருக்கிறது.

* *

மஞ்சாபுரம் திராவிட வாலிப சங்கக் கூட்டம் தோழர் ஆ. கணபதி தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் நோக்கம் பற்றி பல தோழர்கள் பேசினார்கள். கவி பாரதிதாசன் அவர்களுக்கு பணமுடிப்பொன்று அளிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* *

4-7-45-ல் கரூர் கவிப்புள்ள சகோதரர்கள் சங்கத்தின் சார்பில் தோழர் டி. தமிழரசு தலைமையில் ஒரு இலவச பத்திரகசாலை திறக்கப்பட்டது.

* *

வ. ஆ. ஜில்லா திருப்பத்தூர் முனிசிபல் ஹைஸ்கூல் மைதானத்தில் 15-7-45-ல் வக்கீல் தோழர் ஏ. ஈ. நாச்சியப்பகவுண்டர் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் கே. வி. அழகிரிசாமி முதலியவர்கள் பேசினார்கள்.

* *

முத்துப்பேட்டையில் 9-7-45-ந் தேதி தோழர் அ. இராமச்சந்திரன் தலைமையில் நடந்த திராவிடர் கமிட்டிக்கூட்டத்தில், தோழர்கள் அ. இராமச்சந்திரன் தலைவராகவும், மு. சுப்பிரமணியன் உபதலைவராகவும், ஆர். சாமிநாதன் காரியதரிசியாகவும், வி. இராமநாதன் உபகாரியதரிசியாகவும், பி. வைத்தியநாதன் பொக்கிஷதாரராகவும், 12-பேர் கமிட்டி அங்கத்தினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

8-7-45ல் ராசிபுரத்தில் தோழர் ம. கா. வெங்கடபதி செட்டியார் தலைமையில் நடந்த திராவிடர் கழக அங்கத்தினர் கூட்டத்தில் தோழர்கள் ம. கா. வெங்கடபதிசெட்டியார் தலைவராகவும், அ. வருதப்ப செட்டியார் செயலாளராகவும் மு. கரவேல் நிதிகாப்பாளராகவும், எஸ். துரைசாமி, எஸ். ஐ. அப்துல் சுபான் கான் ஆகியவர்கள் செயலுறுப்பினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

15-7-45-ல் மதுரை நகர் திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் தோழர் டி. நாராயணன் தலைமையில் நடைபெற்றது. அங்கத்தினரிடம் அணா 2 சந்தா வசூலிப்பதென்றும், வரவு செலவு கணக்குகளை மாதாமாதம் நிர்வாகக் கமிட்டி முன் ஆஜர் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

கோவை நகர திராவிடர் கழக நிர்வாகஸ்தர் தேர்தல் கூட்டம் 11-7-45-ல் தோழர் வி. சிகப்பண்ணன் தலைமையில் நடந்தது. தோழர்கள் என். பன்னாரி தலைவராகவும், சி. ராஜகோபால், எஸ். வ. ராசமாணிக்கம் காரியதரிசிகளாகவும், எம். பட்டிலிங்கம் பொருட்காப்பாளராகவும், 16 பேர் நிர்வாகக் குழுவினர்களாகவும், தெரிந்தெடுக்கப்பட்டார்கள்

---

கும்பகோணம் தோழர் என். கே. சாமி அவர்களின் தம்பி கறுப்பையன் என்பவர் தமது 28-வது வயதில் 28-6-45ந் தேதி இயற்கையெய்தினார்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.